**தேதி :** 04.08.2025 **SC.No. :** 344/2021 PW :1 அருணாகரன்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் கூறியுள்ளதை தான் ஆய்வாளர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல்துறையில் 20 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். நாங்கள் என்ன வேலை செய்தாலும் அதனை பாக்கெட் டைரியில் எழுதுவோம் என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் தினமும் ரோல் கால் நடக்கும் என்றால் சரிதான். ரோல்காலில் ஒவ்வொரு காவலர்களுக்கும் பணி ஒதுக்கீடு செய்யப்படும் என்றால் சரிதான். டூட்டி ரிஜிஸ்டரில் அந்த பதிவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவ காலக்கட்டத்தில் நான் என்ன பணியில் இருந்தேன் என்று பொதுநாட்குறிப்பில் விபரங்கள் இருக்கும். நான் ஆய்வாளர் விசாரணையில் பாக்கெட் டைரியை அவரிடம் ஒப்படைத்துள்ளேன். காவலர்கள் வெளிப்பணிக்கு செல்லும் போது, பாஸ்போர்ட் வழங்குவது வழக்கம் என்றால் உள்ளூர் பணிகளுக்கு வழங்கப்பட மாட்டாது. அயல் பணிக்கு செல்லும் போது வழங்கப்படும்.

ரோந்து செல்லும் பீட் டிக்கெட் கொடுப்பார்கள். பீட் டிக்கெட்டில் எந்த நேரத்திலிருந்து எந்த நேரம் வரைக்கும் மற்றும் எந்த பகுதியில் ரோந்த செய்ய வேண்டும் என்று எழுதப்படும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு தென் ஓரத்தில் நவீன கட்டண கழிப்பறை உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேல்புறம் குருசாமி கோவிலும், அதற்கு மேல்புறம் கருப்பசாமி கோவிலும் உள்ளது என்றால் சரிதான்.

கருப்பசாமி கோவிலுக்கு மேற்புறம் எஸ்.கே.பி பைனான்ஸ் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. மைதானத்திற்கு வடபுறம் பேரூராட்சிக்கு சொந்தமான கட்டிடம் உள்ளது என்றால் மேல்புறம் உள்ளது. அந்த கட்டிடத்தில் 3 கடைகள் உள்ளது. மைதானத்திற்கு கீழ்புறம் கீழப்பாவூரிலிருந்து அருணாப்பேரிக்கு செல்லும் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். அருணாப்பேரிக்கு செல்லக்கூடிய ரோட்டின் கீழ்புறம் பாவூர்சத்திர காவல் நிலைய ஜீப் சம்பவநாளில் நின்றது என்றால் சரியல்ல. கருப்பசாமி கோவிலுக்கு அருகில் 2 மைதானங்கள் உள்ளது என்றால் சரிதான். ஒரு மைதானம் ரோட்டிற்கு கீழ்புறம் உள்ளது.

என்னுடைய தனி அறிக்கையில் எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் சாயங்காலம் 06.00 மணியிலிருந்து இரவு 10.30 மணி வரை பாட்டுக்கச்சேரி நடந்தது என்றால் சரிதான். நான் இரவு ரோந்து பணி செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மைதானம் ஒரு ஏக்கர் பரப்பளவு உள்ளது என்றால் அளவு விபரம் எனக்கு தெரியாது. அந்த மைதானத்தில் சம்பவ நாள் 1000 நபர்கள் கூடியிருந்திருப்பார்கள். மைதானத்தின் எந்த பகுதியில் நான் பாதுகாப்பு பணி செய்து கொண்டிருந்தேன் என்று குறிப்பிட்டு தனி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாட்டுக்கச்சேரி அனுமதியுடன் நடத்தப்பட்டது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் அனுமதி வழங்கும்போது, பாதுகாப்பிற்காக பணம் டெப்பாசிட் வழங்கப்படும் என்றால் அது எனக்கு தெரியாது.

அந்த பாட்டு கச்சேரியை டிரோன் கேமரா வைத்து பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி பாட்டுக்கச்சேரிக்கு இடையூறு ஏற்பட்டதாக எழுத்து பூர்வமான புகார் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரோ, பொதுமக்களோ தரவில்லை என்றால் சரிதான். எதிரிகள் இடையூறு செய்யாததினால் தான் புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ள நாளில், இரவு 09.45 மற்றும் இரவு 10.00 மணிக்கு எதிரிகள் பிரச்சனை செய்ததாக தனி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

ஒவ்வொரு காவலர்களுக்கும் தனித்தனியாக மொபைல் சிம்கார்டு தரப்படும் என்றாலும், அது அலுவலக வேலை நேரத்தில் நாங்கள் வைத்திருக்க வேண்டும் என்றாலும் சரிதான். இரண்டு சம்பவங்களுக்கு பிறகு பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்கு போன் மூலம் தகவல் சொல்லி, கூடுதல் பாதுகாப்பு அலுவலர்களை நான் கோரவில்லை. இவ்வாறு, ஒரு சம்பவம் நடைபெறாததினால் தான் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் எதிரிகளை பிடிக்க நானோ, அ.சா.2 டோ முயற்சி செய்யவில்லை என்றால் எதிரிகள் கையில் கம்பி வைத்திருந்ததினால் நாங்கள் முயற்சி செய்யவில்லை. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்பதினால் தான் எதிரிகளை பிடிக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்த பிறகு நாங்கள் எங்கு ரோந்திற்கு சென்றோம் என்றால் அருணாப்பேரிக்கு சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து பாவூர்சத்திரம் காவல்நிலையம் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. இருசக்கரவாகனத்தில் 5 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான்.

சம்பவநாள் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை. சம்பவயிடத்தில் வைத்தே எனக்கு எதிரிகளின் பெயர், விபரம் தெரிந்தது. நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் நடைபெறும் தவறுகள் சம்பந்தமாக உயர் காவல் அதிகாரிகளுக்கு தகவல் கொடுப்பார்கள் என்றாலும், அதனால் பாவூர்சத்திரம் காவல்நிலைய காவலர்களுக்கு எதிரிகள் கோபம் இருந்தது என்றாலும், எதிரிகளை கஷ்டபடுத்த வேண்டும் என்றாலும், பாவூர்சத்திர காவல்நிலைய உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பின் யோசனையின் பேரில் பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் நான் காவல் பணி செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை ஏசவில்லை, மிரட்டவில்லை, அரசு பணியை தடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொல்லியுள்ள குற்றசாட்டுகள் பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.04 20:11:20 +0530